JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR

DEPOSITION OF WITNESS

CC.No.105/2021 Date: 13.07.2023 P.W.1

பெயர் ° ˙ மெர்லின்

தந்தை /கணவர் பெயர் ° பூமணி

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 13th day of July 2023

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -

1. நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். நான் தற்போது வேலைக்கு செல்லவில்லை, வீட்டில் தான் இருந்து வருகிறேன். என் அப்பா காவல் துறையில் பணி புரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன், ஒரு தங்கை உள்ளார்கள். நானும் என்னுடைய தங்கையும் இரட்டை சகோதரிகள் என்றால் சரிதான். என் அப்பா தற்போது வீட்டில் இருந்து வருகிறார். தேவாலயத்தில் பிரசங்கம் செய்து வருகிறார். 1ம் எதிரிக்கும் எனக்கும் திருமணம் நடைபெறுவதற்கு முன்பாக ஏற்கனவே வேறு ஒரு நபருடன் திருமணம் நிச்சியிக்கப்பட்டு ரத்தாகியிருந்தததது என்றால் சரிதான். எனக்கும் என் தங்கைக்கும் ஒரே நேரத்தில் திருமணம் நிச்சியிக்கப்பட்டு ரத்தாகிவிட்டது. என்ன காரணத்திற்காக முந்தைய நிச்சியத்தார்த்தம் ரத்தாகிவிட்டது என்றால் மேற்படி நிச்சியதார்த்தம் செய்யப்பட்ட மணமகன் குடிபழக்கம் உடையவர் என்று தெரியவந்ததால் நிச்சியதார்த்தம் ரத்தானது.

2. 1ம் எதிரி மற்றும் அவருடைய குடும்பம் எங்களுக்கு எவ்வாறு அறிமுகமானார்கள் என்றால் ஏற்கனவே நடைபெற்ற நிச்சியதார்த்திற்கு இருந்த திருமண தரகர் தான் வரண் அமைத்துக்கொடுத்தார். 1ம் எதிரி குடும்பம் அறிமுகமான பின்னர் எவ்வளவு நாட்களில் நிச்சியதார்த்தம் நடைபெற்று திருமணம் நடைபெற்றது என்றால் 13.12.2017 ம் தேதி எனக்கும் 1ம் எதிரிக்கும் நிச்சியதார்த்தம் நடைபெற்று 05.02.2018 தேதி திருமணம் நடைபெற்றது. எனக்கும் என் சகோதரிக்கும் ஏற்கனவே திருமணம் நடைபெற்றதால் என் அப்பா கௌரவ பிரச்சினையாக என்று நினைத்து உடனடியாக வரன் பார்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் ஏற்கனவே வரன் பார்த்து கொடுத்த தரகர் மீண்டும் வேறு ஒரு நல்ல வரன் உள்ளதாக கூறியதால் உடனடியாக 1ம் எதிரியுடன் திருமணம் நிச்சியிக்கப்பட்டது.

3. என்னுடைய திருமண வாழ்க்கையை எங்கு வைத்து தொடங்கினோம் என்றால் கொடுங்கையூரில் உள்ள 1ம் எதிரிக்கு சொந்தமான வீட்டில் வைத்து தொடங்கினோம். 1ம் எதிரி வீட்டில் திருமணம் நடைபெற்ற போது யார் யார் வசித்தோம் என்றால் நானும் என் கணவரும் வசித்தோம். மேற்படி வீடானது 2வது எதிரிக்கு சொந்தமானது என்றால் சரிதான். திருமணம் நடைபெற்று நான் 1ம் எதிரி வீட்டிற்கு சென்ற போது எதிரிகள் 2 முதல் 4 வரை உள்ளவர்கள் எங்கு வசித்து வந்தார்கள் என்றால் விருகம்பாக்கத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள். என்னுடைய மாமனார் விருகம்பாக்கத்தில் டிராவல்ஸ் வைத்து நடத்தி வந்தார் என்றாலும் எதிரிகள் 2 முதல் 4 வரை உள்ளவர்கள் திருமணத்திற்கு முன்பாகவும் விருகம்பாக்கத்தில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான்.

4. திருமணம் முடிந்து 5 நாட்கள் சிம்லா மற்றும் மணாலி தேன் நிலவிற்கு சென்று வந்தோம். திருமணத்திற்கு முன்பாக எந்த தேதி எந்த இடத்தில் வைத்து ரூ.2 லட்சம் எதிரிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றால் எங்களுடைய பாடியில் உள்ள வீட்டில் வைத்து கொடுத்தார்கள், தேதி ஞாபகம் இல்லை. பணம் கொடுத்ததற்கான ஆவணம் ஏதேனும் விசாரணையில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் 1, 2 எதிரிகள் தொலைபேசியில் பேசியதை பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்துள்ளேன். திருமணத்தை உடனடியாக நடத்த வேண்டும் என்பதற்காக என்னுடைய அப்பா எதிரி குடும்பத்தாருக்கு ரூ.8 லட்சம் வட்டிக்கு பணம் கொடுத்து திருமணம் நடந்து முடிந்தவுடன் பணத்தை திரும்ப பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, ரூ.8 லட்சமானது வரதட்சனை பணமாகும்.

5. திருமண செலவு தொகையான ரூ.5,14,000 எதிரி தரப்பில் கொடுக்கவில்லை என்று நான் கூறியது பொய் என்றால் சரியல்ல. இருவீட்டார் இடையிலும் திருமணம் நிகழ்ச்சிகள் பெண் வீட்டார் செய்ய வேண்டும்

என்றும் வரவேற்பு மணமகன் வீட்டில் செய்ய வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல, இருவீட்டாரும் சேர்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தான் முடிவு செய்யப்பட்டது. என் கணவர் வீட்டில் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக ரூ.7 லட்சமும் மறுவீடு அழைக்கும் நிகழ்ச்சிக்காக ரூ.1,20,000 மற்றும் சீமந்த செலவாக ரூ.1,00,000 செலவு ஆனது என்றால் சரியல்ல. வட்டக்கோட்டை என்ற ஊரில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கு ரூ.50,000 மட்டும் தான் செலவு செய்யப்பட்டது. தேன் நிலவிற்காக ரூ.70,000 செலவு செய்யப்பட்டது. சீமந்ததிற்கு ரூ.25,000 மட்டும் தான் செலவு செய்யப்பட்டது.

6. திருமணத்திற்காக எதிரி தரப்பில் 11 சவரன் நகை எனக்கு போடப்பட்டது என்றால் சரிதான், நேக்லஸ், மோதிரம், தாலி செயின் ஆகியவை போட்டார்கள். என் அப்பா வீட்டில் எனக்கு போட்ட நகைகள் அனைத்தையும் நான் தான் வைத்தியிருந்தேன் என்றாலும் எத்தனை சவரன் நகைகள் என்று எனக்கு மட்டும் தான் தெரியும் என்றால் சரியல்ல, நான் 2ம் எதிரியிடம் என்னுடைய நகைகளை கொடுத்துவிட்டு தான் நான் தேன் நிலவிற்கு சென்றேன். நான் ஆஜர் எதிரியிடம் நகைகள் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் கழுத்தில் போட்டுயிருந்த செயினை தவிர மற்ற நகைகள் அனைத்தையும் என் அப்பாவிடம் கொடுத்துவிட்டு தேன் நிலவிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. திருமணம் நடைபெற்று எத்தனை மாதத்தில் நான் கருவுற்றேன் என்றால் 3 மாதத்தில் கருவுற்றேன். எதிரிகள் என்னை கொடுமைப்படுத்தியதால் நான் என் அம்மாவீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் என் அம்மாவின் அரவணைப்பு வேண்டும் என்ற காரணத்திற்காக கருவுற்றியிருந்தபோது நான் அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல.

7. நான் கருவுற்றியிருந்தபோது 2ம் எதிரி எங்கு இருந்தார் என்றால் வட்டக்கோட்டையில் இருந்தார். எனக்கு திருமணம் நடைபெற்ற சமயத்தில் 2ம் எதிரி கன்னியாகுமரிக்கு சென்று வந்தார் என்றாலும் எங்கள் வீட்டில் நிலையாக தங்கவில்லை என்றால் சரிதான். அவர் விருகம்பாக்கத்தில் உள்ள வீட்டிற்கு சென்று கன்னியாகுமரியில் உள்ள வட்டக்கோட்டத்திற்கு சென்றுவந்தார். எதிரி வீட்டில் லாக்கர் ஏதும் இல்லை என்றாலும் நான் நகைகளை லாக்கரில் வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் எதிரி வீட்டில் லாக்கர் இல்லை, பீரோவில் தான் நகைகளை வைத்தியிருந்தார்கள். என்னுடைய நகைகள் எதையும் அவர்கள் பீரோவில் வைக்கவில்லை என்றாலும் மேற்படி நகைகளை என் அப்பாவிடம் தான் கொடுத்துவிட்டு சென்றேன் என்றால் சரியல்ல.

8. 1ம் எதிரி சிறு சிறு கடன்கள் வாங்கியிருந்தார் என்றாலும் அதனை அடைக்கவேண்டும் என்று அவர் முற்பட்டபோது நகைகளை வைத்து கடன்களை கட்டி முடித்துவிட்டு வீடுகட்டலாம் என்றும் நான் 1ம் எதிரியிடம் ஆலோசனை கூறினேன் என்றால் 1ம் எதிரிக்கு கடன் இருக்கும் விஷயம் எனக்கு தெரியாது. என்னுடைய நகையை வைத்து கடன் அடைத்து என்னுடைய நிலத்தில் வீடு கட்டி வைக்கலாம் என்று நான் கூறவில்லை.

**(எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur